[1972 மார்ச் 27

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, ஜிரேனியம், யூக்காலிப்ட்டஸ், எலுமிச்சை போன்ற செடிகள் வளர்க்கப் படுகின்றன.

சிறு தொழில்களுக்கு மின் கட்டணச் சலுகை

* 732 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சிறு தொழில்களுக்கு உபயோகப்படுத்தப்படும் மின்சா ரத்திற்குக் கட்டணம் செலுத்துவதில் சலுகை ஏதேனும் காட்டப் படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்சாரக் கட்டண விதித்துறைகளின் கீழ் 5 குதிரைத் திறனுக்கு மேற்படாத மின் அழுத்த அளவு கொண்ட உண்மையான சிறு குடிசைத் தொழில்களுக்கு, யூனிட் ஒன்றுக்கு 12 காசு என்னும் குறைவழுத்த வேளாண்மை மின் கட்டணம் பொருந்தும். சிறப்புச் சூழ்நிலைகளில் தலைமைப் பொறியாளர் (மின்சாரம்) குதிரைத் திறன் பேரளவைத் தளர்த்தலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 5 குதிரைத் திறனுள்ள சிறு தொழில்களுக்கு 12 பைசா சலுகை அளிக்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னுர்கள். இதன் மூலம் ஆண்டுக்கு அரசாங் கத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இப்போது முழு விபரம் இல்லை. சில சிறப்புச் சூழ்நிலைகளின் காரணமாக குதிரைத் திறன் அளவைத் தளர்த்துவதற்கும் தலைமைப்பொறியாள ருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

கோவை-திருச்சி அரசு பேருந்துகள்

*714 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை-திருச்சி அரசு பேருந்துகள் திருப்பூர் வழியாக செல்லவேண்டும் என்று அத்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர்

1972 மார்ச் 27]

கேட்டதின் பேரில் 1970-ம் ஆண்டில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) உறுப்பினரின் வேண்டுகோள் அரசால் பரிசிலனே செய்யப்பட்டது. கோயம்புத்தூரிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் வழித்தடத்தில் பேருந்துகளைத் திருப்பூர் வழியாக விடுவது அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டது. ஏனெனில், இவ்வாறு திருப்பி விடுவதால் நேரடியாகச் செல்லும் பயணிகளின் பயணக்கட்டணம் உயர்ந்து விடும். மேலும் திருச்சிராப்பள்ளியிலிருந்து உதகமண்டலம் செல்லும் அரசுப் போக்குவரத்து வழித்தடத்தின் மூலம் திருச்சிராப்பள்ளியுடன் திருப்பூர் இணைக்கப்பட்டுள்ளது; அன்றியும், கோயம்புத்தூர்–சென்னை, தூத்துக்குடி–கோயம்புத்தூர் வழித்தடங்கள் மூலம் கோயம்புத்தூருடன் திருப்பூர் இணைக்கப்பட்டுள்ளது. இக்காரணங்களைக் கருத்திற்கொண்டு மேற்சொன்னவாறு முடிவு எடுக்கப்பட்டது. ஆயினும் திருப்பூரிலிருந்து திருச்சிக்கு தனி விரைவு பேருந்து விடப்படுகிறது.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற முறையில் கோவையிலிருந்து திருப்பூருக்கு வரவேண்டுமானால் இரண்டு மைல் தூரம் அதிகமாக இருக்கிறது. ஆகவே இதை மீண்டும் அரசு பரிசிலனே செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திருப்பூரிலிருந்து திருச்சிக்கு விரைவு பேருந்து விடப்படுகிறது. கோவையிலிருந்து திருப்பூர் வழியாகத் திருச்சிக்கு விரைவுப் பேருந்து விடுவோமானால் திருப்பூரில் டிக்கட் கிடைப்பது கடினம்.

அரசு பேருந்துகள்

*733 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடிக்கும் போளூருக்குமிடையே ஆலங்காயம் வழியாக அரசு பேருந்து வண்டிகளை விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.